செ.வெ.எண்: 713 நாள்: 25.11.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டத்தில் தொழில் சார் சமூக வல்லுநர் பணியிடங்களில் பணிபுரிய 06.12.2021 -க்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

தமிழக அரசு உலக வங்கி நிதியுதவியுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலம் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம், ஊரக தொழில்களை மேம்படுத்தல், வேலைவாய்ப்பு மற்றும் நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை, திருவரங்குளம், அறந்தாங்கி மற்றும் விராலிமலை வட்டாரங்களைச் சார்ந்த 172 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தனிநபர் மற்றும் குழுத் தொழில்களை ஊக்குவித்தல் மற்றும் உருவாக்குதல், கள அளவில் திட்டப்பணிகளை செயல்படுத்துவதற்கு உதவியாகயிருத்தல், திட்டப்பணிகளை மக்களிடம் எடுத்துச் செல்லுதல், திட்டப்பணிகளை ஊராட்சி அளவில் முன்னின்று செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ள தொழில் சார் சமூக வல்லுநர் (Enterprise Community Professional) என்ற தற்காலிக பணியிடங்களுக்கு அனுபவம் மிக்க இளங்கலை பட்டம் பெற்ற 25 முதல் 45 வயதிற்கு மிகாமல் இருக்க கூடிய தகுதியான சுய உதவிக் குழு மற்றும் சுய உதவி குழு குடும்பங்களைச் சார்ந்த அதே ஊராட்சியில் குடியிருக்கும் நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தகுதிகள் பற்றிய விவரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவங்கள் பெறுவதற்கு அறந்தாங்கி, திருவரங்குளம் மற்றும் விராலிமலை வட்டாரங்களை சார்ந்தவர் அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் உள்ள வட்டார சேவை மைய கட்டிடத்தில் செயல்பட்டு வரும் ஊரக புத்தாக்க திட்ட அலுவலகத்திலும், புதுக்கோட்டை வட்டாரத்தை சார்ந்தவர்கள் பெருங்களூர் ஊராட்சி கிராம சேவை மையத்தில் செயல்பட்டு வரும் வட்டார புத்தாக திட்ட அலுவலகத்திலும் விண்ணப்பங்களை பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 06.12.2021 அன்று மாலை 5 மணிக்குள் அந்தந்த வட்டார திட்ட அலுவலகத்தில் சமர்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விபரங்களுக்கு தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்ட புதுக்கோட்டை, மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, T.S.No.217/1A முதல்தளம், தஞ்சாவூர் மெயின் ரோடு, ராமச்சந்திராபுரம் அக்ரஹாரம், புதுக்கோட்டை மாவட்டம் என்ற முகவரி மற்றும் 04322- 290732 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**